**கல்வியின் சிறப்பு**

கல்வி என்பது இந்த உலகில் பெரிதாக மதிக்கப்படும் ஒன்று. “கல்வி ஒன்றே இந்த உலகை மாற்றக்கூடிய சக்திவாய்ந்த ஆயுதம் என்பது நெல்சன் மண்டேலாவின் வாக்கு. ஒரு மரத்திற்கு எப்படி அதன் வேர் முக்கியமோ அதேபோலத்தான் மனிதனுக்குக் கல்வி. இன்றைய வாழ்க்கை முறையில் கல்வி என்பது ஓர் அடிப்படை மற்றும் அத்தியாவசியத் தேவையாக மாறிவிட்டது. ஆனால், கல்வியை மட்டும் வைத்துக்கொண்டு மனிதன் வாழ்க்கையில் உயரிய நிலைகளுக்குச் செல்ல இயலாது. வாழ்க்கை மேம்படவும் நன்றாக இருக்கவும் கல்வி அவசியம்தான். எனினும், நல்ல பண்புகளும் வாழ்க்கையில் மகிழ்ச்சியும் இருந்தால்தான் வாழ்க்கை பூரணமாகும். ஆதலால், மனிதனின் வாழ்க்கை மேம்படுவதற்குக் கல்வி மட்டும் போதாது எனும் கருத்தை ஒட்டி இந்தக் கட்டுரை அமைகிறது.

கல்வி கற்பதால் நாம் நம் வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்குச் செல்ல இயலும். நன்றாகப் படிப்பதன் மூலம் நம்மால் ஒரு நல்ல வேலைக்குச் செல்ல முடியும். நல்ல வேலைகள் என்று குறிப்பிடும்போது இரு கைகளை நிரப்பும் அளவு சம்பளத்தைக் கொடுக்கும் வேலைகளையே குறிக்கின்றன. சம்பளம் பெரிதாக இருப்பதால் நம்மால் வாகனம், வீடு, நகை போன்ற ஆடம்பரங்களை அனுபவிக்கலாம். நினைத்த பொருள்களை வாங்கலாம். எனவே, நல்ல கல்வியின் மூலம் ஆடம்பரத்தைப் பெற்றுக்கொள்ள இயலுவதோடு நல்ல வாழ்க்கை நிலையும் நமக்கு உண்டாகிறது.

ஆனால், வாழ்க்கையில் நாம் பொருளாதாரத்தில் மட்டும் மேம்பட்டால் போதுமா? பிறர் நம்மைப் பார்த்து மதிப்பதும் நமது வாழ்க்கையை மேம்படுத்தும். பிறர் நம்மைப் பார்த்து மதிப்பதென்பது நல்ல பண்புகளை உள்ளடக்கியிருந்தாலேயே முடியும். கல்வி மட்டும் போதும் என்றால் ஏன் பள்ளிகளில் மாணவர்களுக்கு இணைப்பாட நடவடிக்கைகள் நடத்தப்படுகின்றன. பண்புகளுக்கும் மனிதனுடைய வாழ்க்கையில் மதிப்புள்ளதே இதற்குக் காரணம் ஆகும். தவற்றிலிருந்து கற்றுக்கொள்வது, விடாமுயற்சி, தோல்வியிலிருந்து மீளும் தன்மை போன்ற நற்பண்புகளை உடைய மனிதன் கடவுளைவிட உயர்வாகக் காணப்படுகிறான்.

இத்தகைய நற்பண்புகள் ஒருவனுக்கு மிகவும் முக்கியம். “ஒழுக்கம் உயிரென ஓம்பப்படும்” என்பது முதுமொழி. அதிலிருந்தே மனித வாழ்க்கையில் பண்புகளுக்கான இடம்பற்றிய உண்மை புலப்படுகிறது. ஆகையால், பிறர் நம்மைப் பார்த்து மதிப்பதும் நம்மை அவர்களின் எடுத்துக்காட்டாகப் பார்ப்பதும் நாம் வாழ்ந்த வாழ்க்கை வெற்றியடைந்துவிட்டது என்பதற்கு ஒரு முக்கிய ஆதாரம் ஆகும். இது நம் வாழ்க்கையை மேம்படுத்தும். எனவே நற்பண்புகள் மூலம் நமது மதிப்பு உயர்வதும் நமது வாழ்க்கை மேம்படுவதும் உறுதி.

இன்றைய காலகட்டத்தில் மகிழ்ச்சி எனும் வார்த்தைக்குப் பொருள் மாறிவிட்டது. நமது வாழக்கையை மேம்படுத்துவதற்காக நாம் தொடர்ந்து வெற்றியைத் தேடி அலைகிறோம். ஆனால் நாம் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியைத் தொலைத்துவிட்டோம். இருப்பினும், வாழ்க்கையை மேம்படுத்துவதோடு வெற்றியையும் தேடித்தரக்கூடியது மகிழ்ச்சி ஒன்றுதான் என்பதை நம்மில் எத்தனை பேர் அறிவோம்? பணம் ஈட்டுவதற்காக அல்லும் பகலும் உழைத்து, குடும்பத்தை மறப்பது இன்றைய காலத்தில் இயல்பானதொன்றாகும். பொருள் ஈட்டுவதன் மூலம் மகிழ்ச்சி தரும் பொருட்களை வாங்கலாம். ஆனால், உண்மையான மகிழ்ச்சியை வாங்க இயலாது. வாழ்க்கையில்

LIVEWORKSHEETS

மகிழ்ச்சியிருந்தால்தான் வாழ்க்கை நிலை மாறும். மகிழ்ச்சியைத் தொலைத்தவன் அவன் வாழ்க்கையையே தொலைத்தவனாகிறான். குடும்பத்தில் பிரச்சனைகள் இன்றி மகிழ்ச்சியாக இருப்பது வாழ்க்கையின் சூழ்நிலைகளை மாற்றியமைக்கும். இதனால், வாழ்க்கையின் தரம் உயரும். மேலும், வாழ்க்கை அழகாக மாறிவிடும். வாழ்க்கையை வாழ்வது என்பது அதிலிருந்து நமக்குக் கிட்டும் அனுபவத்தைப் பெறவே ஆகும். வாழ்க்கை எனும் சமையலில் மகிழ்ச்சி எனும் பொருள் இருந்தால்தான் சுவைகூடும். ஆகவே, மகிழ்ச்சியாக இருப்பதால் நல்ல அனுபவங்களைப் பெற இயலும். இதனால், வாழ்க்கையின் தரம் நிச்சயம் மேம்படும்.

நல்ல கல்வியின் மூலம் பொருள் கிட்டும். அதனால், நம்மால் ஆடம்பரமான வாழ்க்கை முறையைக் கைக்கொள்ள முடிகிறது. இது நம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, வாழ்க்கையை மேம்படுத்துவதாகத் தோன்றும். ஆனால், நற்பண்புகளுக்கும் மகிழ்ச்சிக்கும் வாழ்க்கையில் ஒரு முக்கிய இடம் உண்டு. இவையும் நம் வாழக்கைத்தரத்தை உயர்த்தி, வாழ்க்கையை மேம்படுத்தும். வாழ்க்கை என்பது மனிதர்களுக்குக் கிடைத்த வரம் ஆகவே, போற்றுவதும், மேம்படுத்துவதும் நம் கைகளில்தான் உள்ளது. ஆகையால், வாழ்க்கையை ஒரு பயணமாய் எண்ணி, அதை நம்மால் முடிந்தவரை ரசிப்பது அவசியம்.

**காவ்யபாரதி**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 4**

LIVEWORKSHEETS

## நம் எதிர்காலம் நம் கையில்

அறிவியல் வளர்ச்சியில் உலகில் அனைத்துச் செயல்பாடுகளும் அதிவேகமாகிக் கொண்டே போகின்றன. இன்று, தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்ற எண்ணம் அனைவருடைய மனத்திலும் உண்டாகியுள்ளது. ஆனால், அதே சமயத்தில் உலகத்தில் எதிர்பாராதவாறு பல பாதிப்புகள் ஏற்பட அதிக வாய்ப்பு உண்டு. எப்படி இருந்தாலும் இப்போதும் இளையர்கள் தம்மால் எதையும் சமாளிக்க முடியும் என்ற எண்ணத்தில் உறுதியாக இருக்கிறார்கள். அவர்கள் தம்மால் தம் வாழ்க்கையைச் சமாளித்து, சரிசெய்து தம் எதிர்காலத்தை நன்கு வடிவமைக்க முடியும் என்று நம்புகிறார்கள். இருப்பினும் பலருக்கு அதன்மீது சில குழப்பங்கள், சந்தேககங்கள் ஏற்படுவது உண்டு. இதைக் காட்டிலும் பல சாதனைகளை இளைஞர்கள் செய்துள்ளனர். அதனால், 'நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது' என்று பெரும்பாலான இளையர்கள் நம்புகிறார்கள் என்ற வாக்கியம் ஓரளவிற்கு மட்டுமே உண்மை. இந்தக் கருத்துக்கு எதிராகப் பல சம்பவங்கள் நடக்கின்றன என்பதும் உண்மை. அதனால்தான் இவ்வாக்கியம் ஓரளவிற்கு மட்டுமே உண்மை.

முதலாவதாக, 'நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது' என்று பெரும்பாலான இளையர்கள் நம்புகிறார்கள்' என்பதற்குக் காரணம் இளையர்கள் ஆவர். அவர்கள் நன்றாக உழைக்கிறார்கள். அவர்கள் தம் வாழ்வில் ஏற்படும் தடைகளைப் படிகளாக மாற்றி நன்றாக எதிர்காலத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்று உழைக்கிறார்கள். அதை ஒரு சிலர் நன்கு செய்து இப்போது சிறந்து விளங்குகிறார்கள். அது மறுக்க முடியாத உண்மை. இந்த முன்னேற்றத்திற்கு அவர்களின் உழைப்பே காரணம் என எண்ணலாம். அதனால், 'நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையர்கள் நம்புகிறார்கள்' என்பது உண்மை.

ஆனால், என்னதான் நன்றாக உழைத்தாலும் பலர் தனக்கு ஏற்படும் சிறு தோல்விகளால் சுலபமாக வெறுத்துப்போய் இறுதியில் உழைப்பைக் கைவிடுகிறார்கள். இதனால், தாம் எட்டக்கூடிய உயரத்தை எட்டாமலேயே போகிறார்கள். உலகில் எத்தனையோ பேர் இருந்தும் சாதித்தவர்கள் மிகக் குறைவாகவே இருக்கிறார்கள். அதற்கு, அவர்களிடம் உள்ள தன்னம்பிக்கை குறைவாக இருப்பதும் உழைப்பைச் சீக்கிரம் கைவிட்டுச் சுலபமாக வெறுத்து போவதுமே காரணங்களாகும். எதிர்காலம் தம் கைகளில் என்று இளையர்களாக இருக்கும்போது நம்பியிருந்தால் இது நடந்திருக்காது. ஆகவே, 'நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையர்கள் நம்புகிறார்கள்' என்ற கருத்து உண்மையல்ல.

இருப்பினும், 'நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையர்கள் நம்புகிறார்கள்' என்பது உண்மை. அதற்குக் காரணம் இளையர்கள் நன்றாகப் படிக்கிறார்கள். அவர்கள் கல்வியின் அவசியம் அறிந்து நன்றாகப் படித்து எதிர்காலத்தில் நல்ல ஒரு நிலையில் இருக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். அதனால், 'நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையர்கள் நம்புகிறார்கள்' என்பது உண்மை.

அதே சமயத்தில் அவர்களுடைய செயல்களையும் நடக்கும் விதத்தையும் பார்க்கும் போதும் தம் எதிர்காலம் தம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையர்கள் நம்புவதாகத் தெரியவில்லை. அவர்களிடம் உள்ள விளையாட்டுப் புத்தியும்

LIVEWORKSHEETS

அலட்சியப்போக்கும் தம் எதிர்காலத்தைப் பற்றி அவர்கள் நன்கு யோசிப்பது இல்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. அவர்களுக்கு எதிர்காலத்தைப் பற்றிய எண்ணம் மனத்தில் இருந்தால் இவ்வாறு அலட்சியமாக நடந்துகொள்ளமாட்டார்கள். அதனால் நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையர்கள் நம்புகிறார்கள் என்று முழுமையாகச் சொல்லி விட முடியாது.

அதேசமயம், நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையர்கள் நம்புவது போலத்தான் இருக்கிறது. இதற்குக் காரணம் இளையர்கள் மனத்தில் உலகத்தை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அவர்கள் தமக்குப் பிடித்ததுபோல உலகத்தையும் தம் எதிர்காலத்தையும் வடிவமைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நம் எதிர்காலம் நம் கைகளில் உள்ளது என்ற நம்பிக்கை இருப்பதால்தான் உலகையும் தம் எதிர்காலத்தையும் மாற்ற வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

ஆனால், உலகத்தை மாற்ற எண்ணுவதற்கான முயற்சி எல்லா இளைஞர்களிடம் இருப்பதாகத் தெரிவதில்லை. அவர்கள் காலம் போகிற போக்கில் எவ்வித ஒரு லட்சியமும் இல்லாமல் இருப்பதுபோல அவர்கள் இருக்கிறார்கள். முயற்சி செய்தால்தான் ஒன்று நடக்கும் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. எண்ணம் மட்டும் போதாது என்பதை அவர்கள் அறிந்து வைத்திருப்பதாகத் தெரியவில்லை. அதனால், நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையவர்கள் நம்புகிறார்கள்;' என்பது உண்மை அல்ல.

நம் எதிர்காலம் நம் கையில் என்ற நம்பிக்கையில் இளையர்கள் தனியாகவே எதையும் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள். தம்மை யாராவது ஒரு வட்டத்திற்குள் அடைக்க நினைத்தால் அவர்களுக்கு அது சுத்தமாகப் பிடிக்காது. மேலும், தாம் சுதந்திரமாக முடிவு எடுத்து வாழ வேண்டும் என்று எண்ணுகிறார்கள். இருப்பினும் சுயமாக முடிவெடுத்து வாழ விரும்புபவர்களில் சிலர் தம் பிரச்சினையைத் தாமாகவே சமாளிக்க முடியாமல் சிரமப்படுகிறார்கள். இதனால், வாழ்வில் சில வேளைகளில் என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கிறார்கள். தம் எதிர்காலம் தம் கைகளில் என்று நம்பினால் சுயமாக முடிவெடுக்கும் அவர்கள் அதனால் ஏற்படும் பிரச்சினைகளையும் தாமாகவே சமாளிக்க வேண்டும். 'நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையர்கள் நம்புகிறார்கள் என்பது உண்மையாக இருந்தால் அவர்கள் தைரியமாகப் பிரச்சினைகளைத் தீர்ப்பார்கள். ஆனால், அது உண்மையல்ல அதனால்தான் அவர்கள் பிரச்சினைகளைக் கண்டு திக்கு முக்காடி அஞ்சுகிறார்கள். அவர்கள் நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்று எண்ணி இறுதியில் தவறான முடிவு எடுப்பதால் ஏற்படுவதே இப்பிரச்சினை. இளையர்கள் நம் எதிர்காலம் நம் கைகளில் என்று நம்பாததால் ஏற்படும் விளைவே இது. இறுதியில், 'நம் எதிர்காலம் நம் கைகளில்தான் உள்ளது என்று பெரும்பாலான இளையர்கள் நம்புகிறார்கள்' என்று உறுதியாகக் கூறிவிட முடியாது. அது ஒவ்வொரு தனி மனிதரையும் பொருத்திருக்கிறது.

**அர்ஃபா**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 4**

LIVEWORKSHEETS

## இன்றைய இளையர்கள் நாளைய தலைவர்கள்

"இன்றைய இளையர்கள் நாளைய தலைவர்கள்" என்று சொல்லிச் சொல்லிதான் நாம் இளையர்களை வளர்க்கிறோம். இந்த 21-ஆம் நூற்றாண்டில் ஒவ்வொரு மனிதனும் சுயமாக யோசித்துச் செயல்பட வேண்டிய நிலை உண்டாகியுள்ளது. தன்னை எவ்வாறெல்லாம் மேம்படுத்திக்கொள்ள முடியும், எதிர்காலத்தில் சமுதாயத்தில் ஒரு நல்ல மதிப்பிற்குரிய நிலையை அடைவது எப்படி எனப் பலவற்றையும் ஓடுகிற பாம்பைக் கையால் பிடிக்கும் இந்த வயதிலேயே, இளையர்கள் சிந்திக்க ஆரம்பித்துவிட்டார்கள். இந்தப் போட்டித்தன்மை மிக்க உலகில் யாரும் அவர்களுக்கு உதவப்போவதில்லை என்ற அச்சம் அவர்களுக்குள் குடிகொண்டுவிட்டதே நம் எதிர்காலம் நம் கையில்தான் உள்ளது என்று இந்த வயதிலேயே இளையர் எண்ணக் காரணம் என்று எண்ணுகிறேன்.

"ஒழுங்காகப்படி! அப்போதுதான் உனது எதிர்காலம் அமோகமாக இருக்கும் இப்போது விளையாடினால் எதிர்காலத்தில் உனது வாழ்க்கை நன்றாக அமையாது இவ்வாறு தொட்டதெற்கெல்லாம் "எதிர்காலம்! எதிர்காலம்! என்று பெற்றோர்கள் கூச்சலிடுவதால் எதைச் செய்தாலும் இதனால் எனது எதிர்காலத்திற்குப் பாதிப்பு ஏற்படுமா? என்றுதான் இளையர்கள் யோசிக்கிறார்கள். எதிர்காலத்தைப் பற்றி நாள்தோறும் சிந்தித்துக்கொண்டிருக்கும் இளையர்கள், பசுமையான இந்த இளைமைப் பருவத்தை ரசிக்கவும் அனுபவிக்கவும் தவறிவிடுகிறார்கள். எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனை இருப்பது அவசியம்தான் ஆனால், அதற்கென்று 24 மணி நேரமும் எதிர்காலத்தைப் பற்றியே சிந்தித்தால் நிகழ்காலத்தில் நடக்கும் அற்புதமான விஷயங்களை இளையர்களால் மட்டுமின்றி யாராலும், நிம்மதியாக அனுபவிக்க இயலாது!.

"இந்த வருடம் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரண நிலைத் தேர்வு நடக்கவுள்ளது. அதற்குப் பின் நீ என்ன செய்யப்போகிறாய்? எதிர்காலத்தில் எந்த வேலைக்குச் செல்லலாம் என்று யோசிக்கிறாய்? என்று அவ்வப்போது பெற்றோர்கள், உறவினர்கள், ஆசிரியர்கள் கேட்டவண்ணம் உள்ளனர். இதைக் கேட்டே இளையர்களுக்கு வாழ்க்கையே அலுத்துப்போய்விட்டது. தொடக்கப்பள்ளிக் கல்வி முடித்து உயர்நிலைப் பள்ளியில் சேரும் இளையர்களுக்கு அதிக மனவுளைச்சல் ஏற்படுகிறது. இன்னும் பத்து ஆண்டுகளில் பெரும்பாலானோர் அவர்கள் ஆசைப்படும் வேலைக்குச் சென்றுவிடுவார்கள். ஆதலால், அவர்கள் எந்தத் துறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற சிக்கலுக்கு இப்போது ஆளாகிறார்கள். மேலும், அவர்களில் சிலர் தங்களது எதிர்காலத் திட்டங்களைப் பற்றிப் பெருமையாகக் கூறும்போது தானும் அவ்வாறு தனது எதிர்காலத்தைத் திட்டமிடவில்லையே என்ற வருத்தமும் கோபமும் ஒரு சிலருக்கு உண்டாகிறது. அப்போது இளையர்கள் கூடுதலான மனவுளைச்சலுக்கு ஆளாகிறார்கள். இந்த மனவுளைச்சலால், வருங்காலத்தைப் பற்றி அல்லும் பகலும் யோசித்து இளமைக் காலத்திலேயே நரைமுடி வளர்ந்துவிடுகிறது. பிறர் தனது எதிர்காலத்தை ஒரு சித்திரம்போல் தெளிவாகவும் அழகாகவும் தமது மனத்தில் வரைந்து வைத்திருப்பதால் இளையர்கள் தங்களது எதிர்காலம் தங்களது கைகளிலுள்ளது என்று கருதுகிறார்கள்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள் மட்டுமின்றி இளையர்தம் தனிப்பட்ட ஆர்வமும் அவர்களைத் தங்கள் எதிர்காலத்தைப் பற்றிச் செவ்வனே சிந்திக்க வேண்டுமென்று தூண்டுகிறது. சிங்கப்பூர் உலக வரைபடத்தில் ஒரு சிறு புள்ளி. ஆனால், அதன் வளர்ச்சி அந்தப் புள்ளியைவிட நூறு மடங்கு பெரிதானது என்று சொன்னால் அது மிகையாகாது. உலகமயமாக்கலின் காரணமாக ஏற்பட்டுள்ள விரைவான வளர்ச்சியினாலும்

LIVEWORKSHEETS

தொழில்நுட்பத்தின் அதிவேக முன்னேற்றத்தினாலும் சிங்கப்பூர் பிற நாடுகளுடன் போட்டிப்போட வேண்டுமென்றால் எதிர்காலத்தைப் பற்றி முன் கூட்டியே யோசிப்பது இன்றியமையாததாக மாறிவிட்டது. பிரதமர் லீ தனது தேசிய தினக் கூட்ட உரையின்போதும் சிங்கப்பூர் எதிர்காலத்தில் எவ்விதமான பிரச்சினைகளைச் சந்திக்க உள்ளது என்றும் அவற்றைச் சமாளிக்க அரசாங்கமும் மக்களும் எவ்வாறெல்லாம் தங்களைத் தயார் செய்துகொள்ள வேண்டும் என்பன பற்றிப் போதிய விளக்கங்களுடன் ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளார். சிங்கப்பூரின் பொருளாதாரம் அதன் மக்களின் கையிலுள்ளது. எனவே நம்பிக்கையோடு நமது இளையர்கள் எதிர்காலத்தில் வரும் பிரச்சினைகளை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்து இப்போதே யோசிக்க வேண்டும். அரசாங்கமே எதிர்காலத்தைப் பற்றி அனைவரும் சிந்திக்க வேண்டுமென்பதில் உறுதியாக இருக்கையில் இளையர்கள் மட்டும் அதற்கு விதிவிலக்கா? இளையர்கள் மீது சிங்கப்பூர் அரசாங்கத்திற்கு இருக்கும் நம்பிக்கை பாராட்டக்கூடிய ஒன்றாக இருந்தாலும், அந்த நம்பிக்கையினால் இளையர்கள் எதிர்காலத்தைப் பற்றி எண்ணி அச்சப்படுகிறார்கள்.

என்னதான் இளையர்களின் கையில் அவர்களது எதிர்காலமிருந்தாலும் எதிர்காலத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சவால்கள் அவற்றைக் கடப்பதற்கான வழிமுறைகள் போன்ற அறிவுரைகளை வழங்குவதற்குப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், உற்றார் உறவினர்களோடு;, சமூகம், அரசாங்கம் போன்றவையும் தயாராகக் கத்துக்கொண்டிருக்கின்றன. இளையர்கள் கண்ணைக்கட்டிக் காட்டில்விட்டது போல் இருக்காமல் எதிர்காலத்தைத் தைரியமாகச் சந்திக்க சிங்கப்பூர் அரசாங்கமும் கல்வி அமைச்சும் பல திட்டங்களை வகுத்துள்ளன. உயர்நிலை நான்கில் படிக்கும்போது மாணவர்கள் தன் வாழ்வில் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள பிரச்சினைகள் யாவை அவற்றை எதிர்க்க எவ்வாறு தம்மைத் தயார் செய்துகொள்ள வேண்டும் என்று எண்ணிபார்க்க வேண்டும். மாணவர்கள் எதிர்காலத்தில் அவர்களுக்குப் பிடித்த வேலையை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பது தொடர்பான பயிற்சிப்பட்டறைகள் இப்போது அடிக்கடி நடத்தப்படுகின்றன. உதாரணத்திற்கு எனது பள்ளியில் மார்ச் மாத விடுமுறையின்போது உயர்நிலைப் பள்ளியை விட்டு வெளியேறியதும், அடுத்தபடி என்ன செய்வது என்பதைப் பற்றிய பட்டறை எங்களுக்கு நடத்தப்பட்டது. எவ்வாறெல்லாம் நாம் பல்கலைக்கழகத்திற்குச் செல்லலாம், எந்தவிதமான பாடங்களைத் தேர்ந்தெடுப்பது போன்ற தகவல்களை அறிந்துகொள்ளும்படி பட்டறை ஒன்று நடத்தப்பட்டது. அந்தப் பட்டறைக்குப்பின் எதிர்காலத்தைபற்றிய பயம் நீங்கியதுபோல் ஓர் உணர்வு எனக்கு ஏற்பட்டது. அது மட்டுமின்றி ஆசிரியர்களும் பெற்றோர்களும் அடிக்கடி அவர்களது வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சினைகள்பற்றிப் பேசுவதோடு இளையர்கள் எடுக்கும் முடிவுகளுக்குத் தவறாமல் அறிவுரை வழங்குவதால் இளையர்கள் தங்கள் எதிர்காலத்தைப் பற்றி யோசிக்கப் பயப்படத் தேவையில்லை. ஏனெனில், எந்த நேரத்திலும் அவர்களுக்குக் கைகொடுக்க எண்ணற்றவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த எண்ணமே இளையர்களுக்கு மனத் தைரியத்தை அளிக்கிறது.

ஆக, என்னதான் பெற்றோர், ஆசிரியர்கள், உற்றார், உறவினர்கள், அரசாங்கம் என்று பலரும் இளையர்களைத் தங்களது எதிர்காலத்தைப் பற்றி யோசிக்க வேண்டும் என்று ஆணித்தரமாகக் கூறினாலும் இறுதியில் இளையர்களுக்கு உதவி அவர்களது எதிர்காலத்தை ஒளிமயமாக்க எத்தனைபேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். எதிர்காலத்தை மட்டும் இரவு பகல் பாராமல் யோசித்துக்கொண்டிருந்தால் வாழ்க்கையில் ஒரு நாள் இளமைப்பருவத்தைப் பற்றி நினைக்கும் போது எதிர்காலத்திற்காக இளமைப்பருவத்தில் செய்த செயல்கள்தான்

LIVEWORKSHEETS

நினைவுக்கு வரும். நண்பர்களோடு செய்த அரட்டை, பெற்றோர்களுடன் செலவிட்ட இனிமையான நேரம், பள்ளியில் ஆசிரியரிடம் திட்டுவாங்கியது போன்ற பசுமையான எண்ணங்கள் யாவும் வாரா. இளையர்களின் எதிர்காலம் அவர்களது கையிலிருப்பது உண்மைதான். அதற்கென்று எதிர்காலத்தைப் பற்றி மட்டும் சிந்தித்தால் இளமைப்பருவம் கண் சிமிட்டும் வேகத்தில் பறந்து விடும். ஆகவே, இளையர்கள் எதிர்காலத்தை மட்டும் யோசிக்காமல் நிகழ்காலத்தை மன அமைதியோடு அனுபவிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையின் பருவங்களை முழுமையாக ரசித்து மகிழ்ச்சியுடன் வாழ முடியும் அது மட்டுமின்றி வாழ்க்கையில் அனைத்தும் திட்டப்படி நடந்தால் வாழ்க்கையின் சுவாரசியம் போய்விடும். சில நேரங்கள் திட்டமிடாமல் இருப்பதே சிறந்தது என இளையவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**வைஷ்ணவி அழகுதேவன்**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 4**

LIVEWORKSHEETS

## இளையர் கடமை

அனைவருக்கும் என் முத்தான முத்தமிழ் வணக்கங்கள்! வாழ்க்கை என்பது ஒரு பூந்தோட்டம்! அதிலோ ஏற்படும் பல போராட்டம்! நம்நாடு சிங்காரச் சிங்கப்பூர் பல இளஞ்சிங்கங்கள் நிறைந்த நாட்டின் ஐம்பத்திரண்டாவது பிறந்தநாள் விரைவாக வந்துகொண்டிருக்கிறது. அதை ஆவலுடன் எதிர்பார்க்காத ஆளே இல்லை என்றால் அது மிகையாகது.

இம்மகிழ்ச்சியான தருணத்தில் நாம் ஒன்றை நினைத்துப் பார்க்க வேண்டும். ஐம்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெறும் மீன்பிடிக் கிராமமாக இருந்த நாட்டைச் சிங்காரச் சிங்கையாக மாற்றியது லீ குவான் யூ என்னும் ஓர் இளைஞன்தான். 'இன்றைய இளையர்கள் நாளைய தலைவர்கள்' என்னும் முதுமொழியை அறியாதவரே இருக்க முடியாது. அதற்குச் சிறந்த உதாரணம் நம் மறைந்த தலைவர் லீ குவான் யூ ஆவார். சிங்கப்பூரின் இதயத்துடிப்பே இளையர்கள்தான் என்பதை நிரூபித்தவர் ஆவார். அதை அவர் நம் உரைகளில் கூட பலமுறை கூறியுள்ளார். இச்சிறந்த மனிதன் வாழ்ந்த ஊரில் பிறந்த இளையர்களுக்கு நாட்டுப்பற்றைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

2003-ல், சார்ஸ் நோய் தாக்கியபோது நம் நாடு பல துன்பங்களுக்கு ஆளாகியது. ஆனால், அப்போது நம் இளையர்கள் பலர் கைகோர்த்து ஒற்றுமையாக நின்று அக்கொடிய நோயை விரட்டி, தங்களது நாட்டுப்பற்றை வெளிப்படுத்தினர். யாரும் நோய்க்குப் பயந்து நாட்டைவிட்டு வெளியேறவில்லை. அதிலேயே தெரிந்திருக்கும் நம் இளையர்களின் நாட்டுப்பற்று. என்னதான் நம் இளையர்கள் நாட்டின்மீது பற்றுக் கொண்டிருந்தாலும் அதை வெளிக்கொணர ஒற்றுமை மிக மிக முக்கியம். ஒற்றுமை! ஆம், வெவ்வேறு இனங்களுக்கிடையே உள்ள ஒற்றுமை. ஒரு கை தட்டினால் ஓசை வருமா? அதுபோல நம் இளையர்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டால்தான் நம்நாடு இன்னும் எவ்வளவு துன்பங்கள் வந்தாலும் சமாளித்து வெற்றி நடை போடமுடியும்.

இன்றைய இளையர்கள் சிற்பங்கள் என்றால் பெற்றோர்கள் சிற்பிகள் சிறுவயதிலிருந்தே நாட்டைத் தன் உயிராக மதிக்க வேண்டும் என்று சொல்லிப் பெற்றோர்கள் வளர்க்க வேண்டும். 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்று நம் முன்னோர் கூறியுள்ளனர். அவ்வாறு சிறுவயதிலிருந்தே கற்பித்து வளர்ப்பதால் இளையவர்களுக்கு நாட்டுப்பற்று என்பது தானாகவே வந்துவிடும். நம் இளையர்கள் நாட்டுப்பற்றைப் பல வழிகளில் வெளிப்படுத்தி வருகின்றனர். உதாரணத்திற்குச் சிங்கப்பூரின் 'தங்க மகன்' என்று அழைக்கப்படும் ஜோசப் ஒலிம்பிக் நீச்சல் பந்தயத்தில் உலக சாதனை படைத்துச் சிங்கப்பூருக்குத் தங்கம் வென்று கொடுத்தார். அவர் நினைத்திருந்தால் வேறு நாட்டிற்குக் குடிபெயர்ந்து பதக்கத்தை வென்றிருக்கலாம். ஆனால், தான் பிறந்த நாட்டிற்குத் தங்கம் வென்று தர வேண்டும் என்று கடினமாக உழைத்தார். எனவே இதுவும் இளையர்கள் நாட்டுப்பற்றை வெளிப்படுத்துவதற்கான ஒரு வழியாகும்.

**ராஜ்குமார்**

**உயர்தமிழ்**

**உயர்நிலை**

LIVEWORKSHEETS

## ஒற்றுமையே பலம்

மாற்றங்கள் நிறைந்த இவ்வுலகில் அனைவரும் வெற்றிக்கனியினைச் சுவைக்க விரும்புகின்றனர். வெற்றி என்பதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விளக்கத்தினைக் கொண்டுள்ளனர். மாணவர்கள் என்னும்போது தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் எடுத்து நல்ல பள்ளிகளுக்குச் செல்வது, அதன்மூலம் வருங்காலத்தில் தங்களுக்கென நல்ல இடத்தைத் தக்க வைத்துக்கொள்ளுதல் போன்றவை வெற்றி எனப்படும். வேலை செய்பவர்களுக்கு வெற்றி என்பது சொந்தத்துறையில் தாம் உயர்ந்த பதவியை எட்டுவதாகும். எனவே வாழ்வில் வெற்றி அடைய வேண்டும் என எண்ணிக் குழு உணர்வுடன் செயல்படுவது அவசியம். வெற்றி அடைய வேண்டும் என எண்ணி அனைவரும் குழு உணர்வுடன் செயல்படுவதால் எப்படி வெற்றி கிடைக்கும் என நீங்கள் எண்ணக்கூடும். அதனை இக்கட்டுரையில் விளக்கவுள்ளேன்.

குழு உணர்வோடு வாழ்வினை அணுகுவதன் மூலம் நம்மால் ஒரு பிரச்சினையைப் பல கோணங்களிலிருந்து ஆராய முடிகிறது. நம்மால் பல அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடிவதோடு பிறருடைய அனுபவங்களிலிருந்தும் கற்றுக்கொள்ள முடிகிறது. ஒரு குழுவோடு சேர்ந்து மேன்மை அடையப் பாடுபடும்போது வெற்றி எப்படிக் கிடைக்காது. ஆனால், பிறருடைய கருத்துக்களைக் கருத்திற்கொண்டு நமது முடிவினையும் வெளிப்படுத்துவது எப்படி எனக் கற்றுக்கொள்ள முடிகிறது. இதன்மூலம், சில சமயங்களில் நமது உரிமையை விட்டுக்கொடுக்க நேர்ந்தாலும் நாளடைவில் எவ்வாறு சரியான முடிவினை எடுப்பது எனக் கற்றுக்கொள்ள முடிகிறது.

அனைவரும் தனிமரம் தோப்பாகாது என்பதனை நினைவிற்கொள்வது அவசியம். ஒருவரால் பிறருடைய உதவி இன்றி வாழ்வில் வெற்றி அடைய முடியாது. சரி எது, தவறு எது எனச்சொல்லிக் கொடுக்க ஒருவர், தோல்விகளின்போது துவண்டு கிடக்கும் நிலையில் உற்சாகப்படுத்த ஒருவர், பின் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ள ஒருவர், பல்வேறு அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள ஒருவர் என நம் வாழ்வில் பலரின் உதவி தேவைப்படுகிறது. அனைவரையும் பகைத்துக் கொள்வதன் மூலம் நம்மால் வாழ்வில் வெற்றி அடைய முடியாமல் போவதை நினைத்து அதைத் தவிர்த்து நாமும் உயர்வோம், நானிலத்தையும் உயர்த்துவோம் என்ற சான்றோரின் கூற்றுக்கு இணங்க பிறருடன் கூடிக் கருத்துப் பரிமாற்றம் செய்தால் மட்டுமே நாம், நிறைய சாதனைகளைச் செய்து வாழ்வில் வெற்றி அடைய முடியும்.

போட்டித்தன்மை ஒருவருடைய போராட்டத்தை எதிர்க்கொள்ளும் மனவலிமையை ஏற்படுத்துகிறது. ஊக்குவிக்க ஆளிருந்தால் ஊக்கு விற்பவனும் தேக்கு விற்பான் என நமது முன்னோர்கள் கூறியுள்ளனர். பிறர் நமக்கு ஊக்கம் அளிக்கும்போது நம்மிடையே உருவாகும் போட்டித்தன்மை அனைவரைக் காட்டிலும் சிறந்து விளங்க வேண்டும் என்ற உந்துதலைக் கூட்டும். அப்போது நாம் இதுவரை செய்திடாத அளவிற்குக் கடின உழைப்பினை ஆற்ற நம்மையே தயார்படுத்துவோம். அதன் விளைவாக நாம் இதுவரை கண்டிராத அளவு வெற்றியைக் காண்போம்.

போட்டித்தன்மையே உயர்வு காண்பதை நோக்கி நம்மைச் செயற்படுத்துகிறது. பெற்றோர்கள், ஆசிரியர்கள் போன்றோர் மாணவர்களுக்கிடையே போட்டித்தன்மையை விதைப்பதை விட நாம் தோல்வி காணும் போதே, நம்மிடையே உண்மையான போட்டித்தன்மை உருவாகிறது. போட்டித்தன்மையை நாம் கொண்டிருக்கையில் நமது

LIVEWORKSHEETS